# சீர்காழி சிவசிதம்பரம் – KUMUDAM Article




``எங்க தாத்தா அகத்தியர் வேஷம் போட்டார். பள்ளிக்கூடத்தில் நானும் இப்போ போட்டேன். அவர் பாடின `உலகம் சமநிலை பெற வேண்டும் பாடலை நானும் பாடினேன். அன்னிபுராவும் இரவு எனக்கு தூக்கமே இல்லை. அவ்வளவு பெருமையா இருந்துச்சு.'' என்று உற்சாகமாகச் சொல்லும் வருண் கோவிந்த், சீர்காழி சிவசிதம்பரத்தின் இரண்டாவது மகன். சென்னை செட்டிநாடு வித்யாஸ்ரமத்தில் படித்தபோதுதான் அகத்தியர் வேடம் போட்டதைச் சொல்கிறார். அப்போது மேடையில் கீ போர்டு வாசித்தவர் அவரது பள்ளி தோழர் ஜி.வி. பிரகாஷ்! வருண் இப்போது பி.ஈ. படிக்கிறார். மூத்தமகன் சந்தோஷ் முருகன், பொறியியல் கல்வி முடித்துவிட்டு லண்டனிலுள்ள புகழ்பெற்ற கார்டி.ஃப்ஸ் பல்கலைக்கழத்தில் எம்.பி.ஏ. படிக்கிறார். சீர்காழியாரின் ஒரே மகள் வைஷ்ணவி பி.டெக் மாணவி.

``மூன்று பேரும் தேரழுந்தூர் கமலாவிடம் சங்கீதம் கற்றார்கள். மகள் கொஞ்ச காலம் நாட்டியரசி பத்மா சுப்பிரமணியத்திடம் நடனம் கற்றார். இப்போது ஏ.ஆர். ரஹ்மானின் இசைக் கல்லூரியில் ஹிந்துஸ்தானி, கீ போர்டு கற்றுக் கொள்கிறான் வருண். எங்கப்பா அடிக்கடி சொல்வார்.. `பிராப்தம் இருந்தா அந்த முருகனே அமைச்சு கொடுப்பார்' என்று! அப்படி யாராவது எங்கள் மேடை வாரிசா வருகிறார்களா என்று பார்க்க வேண்டும்'' என்று தத்வார்த்தமாக சிரித்தார் சிவசிதம்பரம்!